செ.வெ.எண்: 312/2016 நாள்: 31.05.2016

## பத்திரிக்கைச் செய்தி

கன்னியாகுமரி மாவட்டத்திற்கு மாற்றுத் திறனாளிகள் சுய தொழில் புரிய உதவும் வகையில் இரு கைகளும் நல்லநிலையில் உள்ள கால்கள் பாதிக்கப்பட்ட மற்றும் செவித்திறன் குறைபாடுடைய மாற்றுத் திறளாளிகளுக்கு மோட்டார் பொருத்திய தையல் இயந்திரம் வழங்க 2015-2016ம் நிதியாண்டிற்கு ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டுள்ளது. எனவே, இரு கைகளும் நல்லநிலையில் உள்ள கால்கள் பாதிக்கப்பட்ட மற்றும் செவித்திறன் குறைபாடுடைய மாற்றுத் திறளாளிகள் இதுநாள்வரை தையல் இயந்திரம் பெறாதவர்களாக இருப்பின்

1. மாற்றுத் திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை நகல்
2. குடும்ப ரேஷன் கார்டு நகல்
3. பாஸ்போர்ட் சைஸ் புகைப்படம் - 1
4. தையல் தெரியும் /தையல் கலை பயின்றதற்கான நகல் சான்று —— 1 ஆகிய ஆவணங்களுடன்

10.6.2016க்குள் நாகர்கோவில் மாவட்ட ஆட்சித் தலைவர் வளாகத்தில் உள்ள மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகத்தில் விண்ணப்பிக்கும்படி கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சஜ்ஜன் சிங் ஆர். சவான், இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி**

மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவவர்,
மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,
கன்னியாகுமரி மாவட்டம் (இ) நாகர்கோவில்.

தொலைபேசி எண் 04652-279411

மாவட்ட ஆட்சித் தலைவர்,
கன்னியாகுமரி மாவட்டம்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகர்கோவில்.